**வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) அவர்களின் செயல்முறைகள்**

**நக. எண்.3198/மாஒ6/ஒபக/2025, நாள். .08.2025**

பொருள்: பள்ளிக் கல்வித் துறை – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – ஆகஸ்ட் 2025 மாத பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் – 29.08.2025 அன்று நடத்துதல் – கூட்டப் பொருள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை: சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1077/A11/பமேகு/ஒபக/2025, நாள்.19.08.2025.

*********

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம், அனைத்து அரசு தொடக்க/நடுநிலை/உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பானது 2024 ஆகஸ்ட் மாதத்தில் நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்களைக் கொண்ட முதல் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டமானது அக்டோபர் – 2024 இல் நடத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மாணவர்களின் வளர்ச்சிக்கும், பள்ளியின் முன்னேற்றத்தில் பங்களிக்கும் வகையில் மாதம் தோறும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. பள்ளி மேலாண்மைக் குழுவின் ஆகஸ்ட் 2025 மாதக் கூட்டமானது அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் 29.08.2025, வெள்ளிக்கிழமை மாலை 03.00 மணி முதல் 04.30 மணி வரை பார்வையில் காணும் செயல்முறைகளில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் கூட்டப் பொருளைப் பின்பற்றி எவ்வித புகார்களுக்கும் இடமளிக்கா வண்ணம் அனைத்து வகை அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்களும் கூட்டம் நடத்திட ஏதுவாக பார்வையில் காணும் செயல்முறைகள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

மேலும் வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு வழிமுறைகளையும், கூட்டப் பொருளையும் பின்பற்றி பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் சிறப்பாக நடத்தி உறுப்பினர் வருகை, தீர்மான விவரங்களை பெற்றோர் செயலியில் (TNSED PARENT APP) உள்ளீடு செய்திடவும், புகைப்படத்துடன் கூடிய ஆவணத் தொகுப்பை பள்ளியில் பராமரிக்கவும் அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
மாவட்டத் திட்ட அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

இணைப்பு –
பார்வையில் காணும் செயல்முறைகள்.

பெறுநர் – அனைத்து அரசு தொடக்க/நடுநிலை/உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசியர்கள்.
(உரிய வழியாக).

நகல் –
1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கநிலை / இடைநிலை), வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ). வேலூர் மாவட்டம்.